## அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கம் - 2014

அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கக் கட்டளைச் சட்டத்தின் (283 அதிகாரம்) மற்றும் 1983 இன் 18 ஆம் இலக்க அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்க அதிகாரச்சட்டத்தின் 18(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு

செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சங்கத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சங்கத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் நன்கொடைப் பணக் கொடுப்பனவுகளைத் தவிர்த்தமையால் அறவிடப்பட வேண்டிய ரூபா 37,556 தொகை மரண ஒதுக்க நிதியக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடன்பட்டோர் பதிவேட்டில் காணப்பட்ட சில கடன்பட்டோர்களிடமிருந்து கிடைத்த தொகை கணனிக் குறிப்புக்களின் பிரகாரம் கடன்பட்டோருக்குரியதாகக் காண்பிக்கப்படாமையும் குறைவாகக் காண்பிக்கப்பட்டமை மற்றும் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டமையும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. தெரிவுக் கணக்காய்வின் போது ஒரு கடன்பட்டோரிடமிருந்து ரூபா 1,000 தொகை கணனியில் காண்பிக்கப்படாமையும், இரண்டு கடன்பட்டோர்களிடமிருந்து ரூபா 9,999 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டமையும், மூன்று கடன்பட்டோரிடமிருந்து ரூபா 45,971 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டமையும் வெளிப்படுத்தப்பட்டது.

(இ) 2014 சனவரி முதல் நவம்பர் வரையான காலத்திற்காக தரைமாடியின் 1050 சதுர அடியை வாடகைக்குப் பெற்ற நிறுவனத்திலிருந்து அறவிட வேண்டிய ரூபா 143,498 தொகை கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் வாடகை உடன்படிக்கை 05 மாதங்களின் பின்னர் கையொப்பமிடப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | கணக்குகளின் படி மீதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| வகைப்படுத்தப்படாத அனுப்புதல்கள் | 1,388,027 | மீதியை உறுதிப்படுத்தும் கடிதங்கள், தனியான மீதிப் பட்டியல் |
| சேவைக்காகக் கிடைத்த முற்பணம் | 98,633 | மீதியை உறுதிப்படுத்தும் கடிதங்கள் |
| நானாவித கடன்பட்டோர் | 1,847,398 | மீதியை உறுதிப்படுத்தும் கடிதங்கள் |
| நானாவித சீராக்கல் கணக்கு | 740,797 | தனியான மீதிப் பட்டியல் மற்றும் காலப்பகுப்பாய்வு |

| | | |
|---|---|---|
| மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 65,985 | மீதியை உறுதிப்படுத்தும் கடிதங்கள், உடன்படிக்கைகள், வைப்புகளுக்குரிய மூல ஆவணங்கள் |

## 2.3 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்ட காலஞ்சென்ற மற்றும் அங்கத்துவத்தை இழந்த அங்கத்தவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,766,471 கூட்டுத்தொகையான மீதியில் ரூபா 1,722,715 தொகை 89 அங்கத்தவர்களிடமிருந்து 01 வருடம் முதல் 05 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக அறவிடவேண்டியதாக காணப்பட்டதுடன் 60 அங்கத்தவர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 1,309,512 கூட்டுத்தொகையில் இருந்து மீளாய்வாண்டின் போது எவ்வித தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. உரிய அங்கத்தவரிடமிருந்து பணத்தை அறவிடுவதற்கோ அல்லது ஈடுசெய்வதற்கோ பங்களிப்பு பணம் அல்லது ஏனையவைகளை அறவிடும் முறைமை ஒன்று சங்கத்திடம் காணப்படாமையால் ரூபா 1,766,471 கூட்டுத்தொகையான கடன் மீதியை அறவிடுதல் நிச்சயமற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

அவ்வாறே பாதுகாப்பு பிணை பெறப்பட்டு கடன் வழங்கப்பட்டிருக்குமாயின் கடனை அறவிடும் இயலுமை காணப்படும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 03 மாதங்கள் முதல் 01 வருடம் மற்றும் 1 வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்குரிய கடன் வட்டி மற்றும் பங்களிப்புப் பணத்தைச் செலுத்தாதிருந்த 49 அங்கத்தவர்களிடமிருந்தும் அங்கத்துவத்தை இரத்துச்செய்யும் கடிதம் அனுப்பப்பட்ட இரண்டு அங்கத்தவர்களிடமிருந்தும் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடவேண்டியிருந்த கடன் வட்டி மற்றும் பங்களிப்புப் பணத்தின் கூட்டுத்தொகை ரூபா 1,911,665 ஆக இருந்தது.

(இ) ஒவ்வொரு அங்கத்தவராலும் மரண உதவுதொகை நிதியத்திற்கு ஒவ்வொரு மாதத்திற்கும் ரூபா 25 படி அல்லது வயது 50 ஆண்டுகள் பூர்த்தியானதை அடுத்து ரூபா 5 படியான உதவுதொகைத் தவணைப்பணம் செலுத்தப்பட

வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் 03 மாதம் முதல் 01 வருடம் மற்றும் 01 வருடத்திற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு உரித்தான ரூபா 37,556 கூட்டுத்தொகையான உதவுதொகைப் பங்களிப்புப் பணம் செலுத்தாதிருந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 42 பேராகும்.

(ஈ) கடன்பெறாது பங்களிப்பு பணம் மாத்திரம் செலுத்தாது இருந்த 85 அங்கத்தவர்களுக்கிடையே அப் பெறுமதியில் ரூபா 534,559 தொகை அறவிடவேண்டியிருந்தது.

(உ) அங்கத்தவரொருவருக்கு செலுத்தப்பட்ட ஆதனக் கடன்களிருந்து 2013 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 358,573 தொகை அறவிடவேண்டி இருந்தது. அத்தொகையில் இருந்து எவ்வித தொகையும் 2013 மற்றும் 2014 நவெம்பர் வரை அறவிடப்படாதிருந்ததுடன் திசெம்பர் மாதத்தின் போது ரூபா 17,875 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. 2015 சனவரி முதல் இதுவரையிலும் எத்தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

சங்கத்தின் யாப்பில் II ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவின் படி 3 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கொடுப்பனவுகளை செலுத்தாது இருக்கும் கடன் தொகையை ஒரேதடவையில் செலுத்துமாறு கடன்காரரிற்கு அறிவித்து கடன் அறவிடப்பட வேண்டும். எனினும் அங்கத்தவரிற்கு வழங்கப்பட்ட ஆதனக் கடன்களிருந்து 2013 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 358,573 தொகை அறவிடவேண்டியதாக காணப்பட்டபோதிலும் 2013 ஆண்டின் போதும் 2014 நவெம்பர் வரையும் எத்தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே காண்பிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1891 இன் 05 ஆம் இலக்க அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்க நியதிச் சட்டத்தின் 16(1)(2) மற்றும் (3) ஆம் பிரிவுகள் | மீளாய்வாண்டின் போது மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்வதற்காக புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ரூபா 50,000 கடன் தொகைக்குரிய விதிகள், உயர்கல்விக்கான ரூபா 100,000 கடன் தொகைக்குரிய விதிகள் மற்றும் 2014 ஒக்தோபர் மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்ட ஓய்வூதிய நிதியத்தை உருவாக்குவதற்கு உரிய விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் திருத்திய நியதிச்சட்டம் | |
| (i) 10 (அ) மற்றும் (ஈ) பிரிவுகள் | இறப்பு உதவுதொகை விருத்தி ஓதுக்க நிதியத்திலும் கட்டிட நிதியத்திலும் உள்ள மிகைப் பணத்தை அங்கத்தவர்களுக்கு கடனாக வழங்குவதற்கு அல்லது திறைசேரி அங்கீகரித்த முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய போதிலும் ரூபா 108,696,228 தொகை திறைசேரியின் அங்கீகாரம் இன்றி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு திறைசேரி உண்டியல்களிலும் நிலையான வைப்புக்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன. |
| (ii) 13(ஏ) ஆம் பிரிவு மற்றும் 2012 செப்தெம்பர் 18 ஆந் திகதிய 1777/38 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி | அரசாங்க வங்கி மூலம் ஒழுங்கமைக்கப்படுகின்ற புனித யாத்திரைகளுக்காக ரூபா 50,000 கடன் வழங்கும் போது அப்புனித யாத்திரை பயணத்திற்காக செலவிடப்படுகின்ற எஞ்சிய தொகை சங்கத்தின் கணக்கில் வைப்புச் செய்யப்படவேண்டிய போதிலும் அந்த நிபந்தனைகளுக்கு முரணாக மீளாய்வாண்டின்போது 13 அங்கத்தவர்களுக்காக ரூபா 640,000 தொகை கடனாக செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (iii) | 10(1) ஆம் பிரிவு | அங்கத்தவர் ஒருவரின் இறப்பை அறிவித்து இரண்டு மாதங்களுக்குள் அவருக்கு உரித்தான இறப்பு உதவுதொகையை செலுத்த வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் இறந்த 20 பேர்களுக்காக ரூபா 935,000 கூட்டுத்தொகையான இறப்பு உதவுதொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை. இறப்பு உதவுதொகை பெறுனர்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களில் குறைபாடுகள் காணப்படுகின்றமை கொடுப்பனவின் தாமதத்திற்கான காரணமாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. வருடமொன்றிற்கு மேற்பட்ட காலத்திற்குரிய செலுத்த வேண்டிய இறப்பு உதவுதொகைக்கான தேவையான குறைபாடுகளை சரிசெய்து இறப்பு உதவுதொகை செலுத்துவதற்கு சங்கம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iv) | II ஆம் அத்தியாயத்தின் 5(I) ஆம் பிரிவு மற்றும் 5(II) ஆம் பிரிவு | இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்ட வட்டி வீதத்திற்கு இணங்க வட்டி வீதத்தை மாற்றுவதற்கு கட்டுப்பாட்டு குழுவிற்கு முடியுமாக இருந்தபோதிலும் ஆதனங்களை பிணையான வைத்துக்கொண்டு அங்கத்தவர்களுக்கு கடன்வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட தினங்களில் காணப்பட்ட 12 சதவீத வட்டி வீதம் தொடர்ந்து அங்கத்தவர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்ததுடன் மத்திய வங்கியின் வட்டி வீதாசாரம் தொடர்பான மீளாய்வு கட்டுப்பாட்டு குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை

| | | |
|---|---|---|
| (i) | XXIV | ஆதனக் கடன் தொகைக்குரிய சகல பதிவேடுகளும் |

| | |
|---|---|
| அத்தியாயத்தின் 11.14 ஆம் பிரிவு | கடன் தொகை செலுத்தி முடியுவுறுத்தும் வரை திணைக்களத் தலைவரின் பொறுப்பில் வைக்கவேண்டிய போதிலும் சங்கத்தினால் செலுத்தப்பட்ட சில ஆதனக் கடன்களுக்குரிய காணிகளின் மூல உறுதிகள் மற்றும் உரித்துறுதி அறிக்கை, ஆதனக் கடன்களுக்காக நீதிச் சேவை வழங்கிய நிறுவனத்தில் காணப்பட்டது. கடன் செலுத்துவதற்காக பெறப்பட்ட ஆவணங்கள் பாதுகாப்பாக பேணுதல் சங்கத்தின் பொறுப்பாக இருந்த போதிலும் அந்தப் பொறுப்புக்களை நிறைவேற்றக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்காமையினால் ஆதனக் கடன்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை உள்ளடக்கிய 33 கோவைகள் 2011 ஆம் ஆண்டின் போது கறையான் அரித்தமையால் அழிவடைந்திருந்தது. |
| (ii) XXIV அத்தியாயத்தின் 11.12 ஆம் பிரிவு | வழங்கப்பட்ட கடன்களில் ஒரு பகுதி அல்லது மீளச்செலுத்துவதற்குரிய அந்த கடன்களுக்கான சொத்துக்களை உரித்தற்றதாக்குவதற்கு அல்லது பிணையின் கீழ் வைப்பதற்கு முடியாதிருந்த போதிலும் அங்கத்தவர்களுக்கு கடன் வழங்கும் போது பிணைவைக்கப்பட்ட சொத்துக்குரிய கட்டிடத்தில் மருந்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு ஆதன உரிமையாளரினால் வெளித்தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக சங்கத்தின் நிதி விளைவுகள் ரூபா 37,935,936 தேறிய இலாபமானதுடன் முன்னைய ஆண்டின் இதற்கொப்பான தேறிய இலாபம் ரூபா 34,982,548 ஆனமையால் மீளாய்வாண்டிற்காக சங்கத்தின் தேறிய இலாபம் ரூபா 2,953,388 இனால் அதாவது 9 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

**(அ) சங்கத்தின் நல்லாட்சிக்கான கட்டுப்பாட்டுக் குழுவின் பங்களிப்பும் கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டங்களுக்கான அங்கத்தவர்களின் பங்களிப்பும்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நடாத்தப்பட்ட 22 மாதாந்த மற்றும் விசேட கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டங்களில் திறைசேரியினால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் 09 கூட்டங்களுக்கு மாத்திரம் கலந்துகொண்டிருந்தனர்.

(ii) குழுக்களுக்குச் சமூகமளிப்பது தொடர்பான விபரங்களின் அடிப்படையில் மாதாந்தக் கட்டுப்பாட்டு குழு, மேலதிக கட்டுப்பாட்டுக் குழுக்கள் மற்றும் உப குழுக் கூட்டங்களுக்கு நியமிக்கப்பட்ட சில அங்கத்தவர்கள் அக்குழுக் கூட்டங்களுக்கு குறைவாகவே சமூகமளித்திருந்தனர்.

இதனால், சங்கத்தின் அபிவிருத்தி தொடர்பாக தீர்மானம் எடுக்கும் போது, சில குழு அங்கத்தவர்களிடமிருந்து, போதியளவு பங்களிப்பு சங்கத்திற்குக் கிடைத்திருக்கவில்லை.

**(ஆ) அங்கத்துவம்**

அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் அங்கத்துவம் தொடர்பாக பரிசீலனை மேற்கொள்ளும் போது 2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான 05 ஆண்டுகளின் போது அங்கத்துவம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| சனவரி 01 ஆந் திகதியில் அங்கத்தும் எண்ணிக்கை | 10,664 | 10,947 | 10,982 | 11,091 | 11,470 |
| கூட்டுக : | | | | | |
| புதிய ஆட்சேர்ப்பு | 671 | 393 | 358 | 583 | 574 |
| மீண்டும் அங்கத்துவத்தைப் பெறல் | 35 | 22 | 13 | 6 | 01 |
| கழி :- | | | | | |
| அங்கத்துவத்திலிருந்து விலகல் | 423 | 380 | 262 | 210 | 270 |
| திசெம்பர் 31 இல் அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 10,947 | 10,982 | 11,091 | 11,470 | 11,775 |

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10,947 ஆக இருந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 2014 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் 11,775 வரை அதிகரித்திருந்ததுடன் முன்னைய ஐந்து ஆண்டுகளில் புதிய அங்கத்தவர்களாக 2,579 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். முன்னைய ஆண்டில் அரச சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்த அளவு பல மடங்காக அதிகரித்திருந்த போதிலும் அங்கத்துவத்தை அதிகரித்துக்கொள்வதற்காக போதியளவானதும் முறையானதுமான திட்டமொன்று பின்பற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(இ) ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு அங்கத்தவர்களின் வருகை**

ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் போது சங்கத்தின் கட்டுப்பாட்டுச் சபைக்காக அங்கத்தவர்களை தெரிவு செய்யப்படுகின்ற போதிலும், அவ் ஆண்டுப் பொதுக் கூட்டங்களுக்கு அங்கத்தவர்களின் வருகை மிகக்குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. இதனால் கட்டுப்பாட்டு சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தல், ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் போது பிரேரனைகளை நிறைவேற்றுதல் அதிக அங்கத்தவர்களின் பிரதிநிதித்துவ அடிப்படையில் இடம்பெற்றிருக்கவில்லை. இந்நிலைமை சங்கத்தின் எதிர்கால

நடவடிக்கைகளுக்கு பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தலாம் என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிலும் கடந்த ஆறு ஆண்டுகளிலும் பொதுக்கூட்டங்களுக்கு அங்கத்தவர்களின் வருகை பின்வருமாறு இருந்தது.

| **ஆண்டு** | **அங்கத்தவர்களின் எண்ணிக்கை** | **பொதுக்கூட்டங்களுக்கு வருகை தந்தவர்களின் எண்ணிக்கை** | **சதவீதம்** |
|---|---|---|---|
| 2014 | 11,775 | 1,562 | 13.27 |
| 2013 | 11,470 | 1,502 | 13.09 |
| 2012 | 11,091 | 1,377 | 12.42 |
| 2011 | 10,982 | 1,363 | 12.41 |
| 2010 | 10,947 | 1,334 | 12.18 |
| 2009 | 10,664 | 1,185 | 11.11 |
| 2008 | 10,727 | 1,037 | 9.67 |

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சங்கத்தின் நடவடிக்கைகள் கணனி முறைமையின் மூலம் அமுல்படுத்த வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது கடன்பட்டோர் தொடர்பான சரியான தகவல்கள் அதன் மூலம் பெறமுடியாதிருந்ததுடன் கணனி முறைமை நாளதுவரையாக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 130 ஆவது வருடாந்த மாநாட்டு அறிக்கை புத்தகம் அச்சிடுவதற்காக மாதிரி ஒன்றை வடிவமைக்காமல் கேள்வி கோரப்பட்மையின் காரணமாக மேலதிக கட்டணமாக ரூபா 16,500 தொகை செலுத்தவேண்டி ஏற்பட்டது.

(இ) சங்கத்தால் 2013 ஆம் ஆண்டின் போது சங்கத்திற்குரிய கட்டிடத்தின் ஒரு பகுதி வெளி நிறுவனமொன்றிற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிறுவனத்திலிருந்து அறவிடவேண்டியிருந்த ரூபா 127,000 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்படாது காணப்பட்டமையால் பெறவேண்டிய தொகையாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த

நிறுவனம் சங்கத்தின் கட்டிடத்தில் இருந்து விலகி 01 வருடமும் 03 மாதங்களும் கடந்திருந்த போதும் அப் பணத்தை அறவிடுதல் நிச்சயமற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சங்கத்தின் அங்கத்தவர்களில் உயிரியல் தரவுகள் தொடர்பான மெய்மையாய்வை செய்வதன் மூலம் அங்கத்தவர்கள் தொடர்பான கணக்குகளில் நீண்டகாலமாக காணப்படும் தீர்க்கப்படாத மீதிகள் (இறப்பு உதவுதொகை உரித்து, கடன் , பங்களிப்பு பணம்) மற்றும் அங்கத்தவர் தொடர்பான விபரம் (இறத்தல், வதிவிடம் மாறுதல் , வெளிநாடு செல்லல், அங்கத்துவத்தை இழத்தல்) தீர்த்து வைப்பதற்கு முடியுமாக இருந்தபோதிலும் அவ்வாறான மெய்யைமயாய்வை மேற்கொள்வதற்கு சங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சங்கம் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்ற புதிய திட்டங்கள் முறையான பிரகாரம் குழுக்கூட்டங்களின் தீர்மானங்களுடன் வருடாந்த பொதுக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியின் மூலம் பிரரிக்கப்பட்டதன் பின்னர் அமுல்படுத்துவது பொதுவான முறைமையாக இருந்தபோதிலும் அதற்கு முரணாக அரசாங்க சேவையில் ஓய்வுபெற்றுச் செல்லும் அங்கத்தவர் மற்றும் தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டிருக்கின்ற அங்கத்தவர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ரூபா 20 படி பணம் அறவிட தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன்படி ஓய்வூதிய படியொன்றை செலுத்துவதற்கு 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 423,117 பங்களிப்பு பணம் அங்கத்தவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் படியினை செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட கால எல்லை மற்றும் அதற்குரிய படிகளுக்கிடையே முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் ஓய்வூதிய படிக்குரிய அங்கத்தவரின் விபரம், நிலுவை பணம் போன்றவை தொடர்பான விபரங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆகஸ்ட் 01 திகதி முதல் சங்கத்தின் தரைமாடியில் ஒருபகுதி தனியார் நிறுவனம் ஒன்றிற்கு மாதாந்த வாடகை தீர்மானிக்கப்பட்டு வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் வழங்கப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 ஆம் திகதி அந்நிறுவனம் கட்டிடத்திலிருந்து விலகியிருந்ததுடன் வாடகை வைப்பாக செலுத்தப்பட்ட ரூபா 110,000 தொகை வருமானத்திற்கு

எடுக்கப்பட்டிருந்த போதிலும் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அநுராதபுரம் கட்டுக்கெலியாவ காணியில் ஓய்வுவிடுதி ஒன்றை நிர்மாணித்தல்

மேற்கூறப்பட்ட ஓய்வுவிடுதி நிர்மாணத்திற்காக 2014 யூன் 10 ஆம் திகதி ரூபா 27,660,111 தொகையான ஒப்பந்த உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஒப்பந்த செயற்பாடு கையளிக்கப்பட்ட நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்த விலை ரூபா 27,724,440 ஆக காணப்பிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தத்தின் விடயங்களுக்காக காணப்பிக்கப்பட்ட கூறுவிலைகளின் கூட்டுத்தொகையின் பிரகாரம் ஒப்பந்த பெறுமதி ரூபா 31,058,607 ஆக இருந்தது. எனினும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அறிக்கையில் அந்த விலை ரூபா 31,097,063 ஆக இருந்தது. கூறுவிலை சமர்ப்பித்த நிறுவனம் கழிவினை காண்பிக்காதிருந்த போதும் கழிவாக ரூபா 2,638,706 தொகை கழிக்கப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்ட நிறுவனத்தின் ஆகக்குறைந்த விலையாக காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் ஆகக்குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனத்தின் விலை ரூபா 30,270,336 ஆக இருந்தது. அதனால் ஆகக்குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டமை ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ii) ஒப்பந்த செயற்பாட்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் பிணை 2014 திசெம்பர் 05 ஆம் திகதி இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) இந்த நிர்மாண செயற்பாட்டிற்காக ஆலோசனை சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு தெரிவுசெய்யப்பட்ட நிறுவனத்திற்காக ஆலோசனை சேவைக்கட்டணம் ஒப்பந்த விலையில் 2.5 சதவீதமாக

தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் ஆலோசனைச் சேவைக் கட்டணம் ஒப்பந்தத்தின் மதிப்பீட்டு விலையான ரூபா 31,585,069 இனை அடிப்படையாக கொண்டிருந்தது.

(ஆ) கணனி முறைமையில் குறைபாடுகள் காணப்படும் போது அந்த கணனிமுறைமையை தாபிப்பதற்காக முதலாவது கட்டத்தின் ஒப்பந்த விலையில் நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 22,500 தொகை ஒப்பந்தகாரரிற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பாதுகாப்பு சேவை வழங்கல்

பெறுமதிசேர் வரிக்காக செல்லுபடியான பதிவு இலக்கம் ஒன்று சமர்ப்பிக்காத நிறுவனத்திற்கு சங்கத்தின் பாதுகாப்பு சேவை வழங்கும் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை பாதுகாப்பு சேவை வழங்குவதற்காக ஊதியத்தைச் செலுத்தும் போது பெறுமதிசேர் வரியாக ரூபா 167,175 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 4.5 நிதியத்தின் குறைவான பயன்பாடு

சங்கத்தின் காசேட்டின் படி 2 வங்கி நடைமுறைக் கணக்குகளில் 2014 சனவரி மாதம் முதல் தொடர்ச்சியாக ரூபா 10 மில்லினை மிகைத்து வங்கி மீதி காணப்பட்டதுடன் மேலதிக வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு அந்த மிகைப் பணம் குறுகிய கால முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.6 விளைவற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

சங்கத்தின் தரைமாடியில் 2250 சதுர அடி 07 மாதங்கள் வாடகைக்கு வழங்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டமை வாடகை அறவிடல் தொடர்பாக விபரங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

### 4.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்

சங்கத்தால் இலங்கை வங்கியில் காப்பகமொன்று 1995 ஆம் ஆண்டு முதல் பேணப்பட்டு வந்ததுடன் அதற்காக ரூபா 10,000 வைப்பும் செய்யப்பட்டிருந்தது. மேலும் காப்பகத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4,000 கட்டணம்

செலுத்தப்பட்டிருந்தது. தற்போது நிறுவனத்தில் சகல ஆவணங்களும் சங்கத்திற்குரிய கட்டிடத்தில் பேணப்படுகின்றமையால் பணம் செலுத்தி காப்பகம் ஒன்றை பேணுதலின் தேவை காணப்படவில்லை.

### 4.8 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடந்த சில வருடங்களாக பதவிநிலை பதவியணியினரில் 02 பதவிகளும் பதவிநிலையல்லா பதவியணியினரில் 6 பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டதுடன், வெற்றிடமாக உள்ள சங்கத்தின் உதவிச் செயலாளர் மற்றும் பொருளாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு 2014 யூலை 25 ஆம் திகதி நேர்முகப் பரிட்சை நடாத்தப்பட்டு பெண் உத்தியோகத்தரொருவர் தெரிவு செய்யப்பட்டிருந்த போதும் 2015 மே 31 ஆம் திகதி வரையிலும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்ட செயல்வழிக்கோவையின் படி 2010 யூலை 21 ஆம் திகதி முதல் 2 வருடங்கள் கடந்ததன் பின்னர் சங்கத்தில் இருக்கின்ற சகல பதவியணியினரும் கடை மற்றும் காரியாலய ஊழியர் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உரித்தாக வேண்டும். எனினும் 2 வருடங்கள் கடந்திருந்த 2012 யூலை 21 இன் பின்னரும் சங்கத்தின் ஒட்டுமொத்த பதவியணியினருக்காக கடை மற்றும் காரியாலய ஊழியர் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

சங்கத்தால் 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

சங்கத்தின் உள்ளகக் கணக்காய்விற்காக இரண்டு உத்தியோகத்தர்கள் மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக போதியளவான பதவியணியினரை ஈடுபடுத்தி ஆக்கபூர்வமான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படுவதற்கு சங்கம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு தரவுகளுக்கும் உள்ளவாறான தரவுகளுக்குமிடையே 54 விடயங்களில் 10 சதவீதம் முதல் 367 சதவீதம் வரையான குறிப்பிடத்தக்க அளவான முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சங்கத்தின் ஒருங்கிணைந்த செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணனி கட்டமைப்பு
(ஆ) இறப்பு உதவுதொகை முறைமை
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) அங்கத்தவர் கடன் கட்டுப்பாடு
(உ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஊ) கட்டுப்பாட்டுக் குழுச் செயற்படுதன்மை